உள்ளத்தால் என்னை உதறித் தள்ளாதீர்கள், மன்னியுங்கள். என்னை மன்னியுங்கள்'' என்று கண்ணீர் கன்னங்கள் மீது வழிய விம்மி அழுதுகொண்டே அவர் காலடியில் விழுந்தேன்.

''மயக்கம் தெளிந்துவிட்டதம்மா. இந்தத் தண்ணீரைச் சாப்பிட்டுவிட்டு எழுந்து நீங்கள் வீட்டிற்குப்போகலாம்'' என்றாள் நர்ஸ் புன்முறுவலுடன். மன உறுதிதான் நோய்க்கு மருந்து என்ற தீர்மானத்துடன் பெட்டியை எடுத்துக்கொண்டு நர்ஸிங் ஹோமை விட்டுக் கிளம்பினேன் நாலு வருஷங்களாகக் காணாத ஒரு சாந்தி என் மனத்தைக் குளிரச் செய்தது.

# ரஞ்சிதத்தின் சஞ்சலம்

நாணத்தினால் முகம் சிவந்த யௌவன மங்கையைப் போன்று இளஞ் சூரிய வெளிச்சத்தில் மலர்ந்து நின்ற ரோஜா மலர்களை ரஞ்சிதத்தின் கை துரிதமாகப் பறித்துக் கூடையில் நிரப்பிக்கொண்டிருந்தது. கடைசியாகச் செடியில் நின்ற அந்த ஒரு மலரையும் வெடுக்கெனக் கிள்ளிக் கூடைக்குள் போட்டாள் அவள். பூவிதழ்மீது படிந்திருந்த பனித் துளிகள் பொல பொலவெனத் தெறித்தோடின. அதே சமயம் அதற்கு ஒத்துப் பாடுவது போன்று ரஞ்சிதத்தின் கருவிழிகளினின்றும் இரண்டு சொட்டுக் கண்ணீர் கீழே உதிர்ந்தது. அவள் துக்கத்தினால் துடித்த தன் உதடுகளைக் கடித்துக்கொண்டு பூக் கூடையைத் தூக்கி இடுப்பில் வைத்துக்கொண்டு வீடு செல்லத் திரும்பினாள்.

''ரஞ்சிதம்! ரஞ்சிதம்!'' மெல்லிய குரல் அவளைத் திரும்பிப் பார்க்கச் செய்தது. யாருடைய நினைவுக்காக அவளது கண்கள் நீரைக் கக்கினவோ அவனே எதிரில் சிரித்துக் கொண்டு வந்து நின்றான். தன் முகத்தை ஆத்தி

ரத்துடன் திருப்பிக்கொண்டாள் அவள்.

''சொல்லிக் கொள்ளாமே ஊருக்குப் போனதுக்கு இவ்வளவு கோவமா உனக்கு? அன்னிக்கி உன்னைப் பார்த்துச் சொல்லிக்கொண்டு போக நேரமில்லே. அடேயப்பா! என்ன கோவம்!'' என்றான் ராஜமுத்து சரசமாக.

சமாதானமடையாத அவள், ''தெரியும் எனக்கு! இப்ப மட்டும் நேரம் கிடைச்சதாக்கும்!'' என்று சீறினாள். துக்கத்தினால் அவளது தொண்டை அடைத்து வார்த்தைகள் மேலே தடைப்பட்டுப் போயின.

''ரஞ்சிதம், இன்னிக்குக் கொஞ்சம் நல்ல கதம்பமா வீட்டுக்கு வேணும். அனுப்பி வைக்கிறாயா? நீ கதம்பம் கட்டினாலே அழகா யிருக்குமுன்னு கேள்வி'' என்று பரிகாசமாகக் கண்ணைச் சிமிட்டினான் ராஜமுத்து.

அவ்வளவுதான்! மடை திறந்ததுபோல் ரஞ்சிதத்தின் கண்களிலிருந்து நீர் வழிந்தோட ஆரம்பித்தது. விம்மி விம்மி அவள் பதில் பேசாதுஅழுதுகொண்டு தோட்டத்தை விட்டுப் போக யத்தனித்தாள்.

ஆச்சரியம் மேலிட்ட ராஜமுத்து அவள் வழியை மறித்து, ''என்ன, உனக்கு உடம்புக்கு ஏதாவது வந்திருச்சா?'' என்றான் ஆதரவுடன்.

''ஆமாம். கொள்ளைநோய் வந்திடுச்சு!'' எனக் கோபத்துடன் கர்ஜித்த அவள் அவனை ஏறெடுத்துப் பார்க்கவும் கூசியவளாய் விடுவிடுவென மேலே நடந்து சென்றாள்.

விஷயம் புரியாத அவன் அப்படியே ஸ்தம்பித்துப் போய் நின்றுவிட்டான்.

வீட்டிற்குள் நுழைந்த அவளை அவள் சிறிய தாயார், ''என்னடி இவ்வளவு நாளி உனக்கு? தோட்டத்துக்குப் போனவள் போனவள்தானா? நீ எப்ப முளுகிச் சமைச்சுப் போடப் போறே?'' என்று கூச்சலிட்டாள்.



தினம் தினம் கொடுஞ் சொற்களைக் கேட்டு அலுத்துப் போன ரஞ்சிதத்தின் மனம் அன்று தன் சிறிய தாயாரின் மொழிகளைக் கேட்டுச் சற்றும் கலங்கவில்லை மௌனமாகக் குடத்தை எடுத்துக்கொண்டு தண்ணீர் கொண்டுவர வெளியே கிளம்பினாள்.

ரேழித் திண்ணையில் படுத்திருந்த பாஞ்சாலி, அவளது சித்தப்பனின் மகள், அப்பொழுதுதான் தூக்கத் தினின்று மெல்ல எழுந்திருந்தாள். தன்னைத் தாண்டிச் செல்லும் ரஞ்சிதத்தைக் கண்ட அவள் சோம்பல் முறித்துக் கொண்டே, ''அக்கா, உங்கிகிட்டே சொல்ல மறந்துட்டேனே! நேத்து ராத்திரியே வந்துட்டாராம் தோட்டக்காரத் தம்பி ஊரிலிருந்து'' என்றாள்.

''வந்தால் எனக்கென்ன!'' என்று சற்று எரிச்சலுடனே கேட்டாள் ரஞ்சிதம்.

''உனக்கு ஒண்ணுமில்லை. சும்மாத்தான் சொன்னேன். கூட அவங்க மாமா, அவரு மகள் எல்லாரும் நம்ப ஊர்த்திருவிழாவைப் பார்க்க வந்திருக்காளாம்'' என்று விடாப்பிடியாகக் கூறி, பாஞ்சாலி கேலியாகச் சிரித்தாள்.

எரிகிற கொள்ளியில் எண்ணெயை வார்த்ததைப் போன்றிருந்தது ரஞ்சிதத்திற்கு, பாஞ்சாலியின் சிரிப்பு.

தன்னையும் மீறி வழியும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு ரஞ்சிதம் வாய்க்காலை நோக்கி நடந்தாள். பாஞ்சாலிமீது குறைகூறி அவளைத் துவேஷிப்பதில் பயன் என்ன? ராஜமுத்து அல்லவா இவளது துன்பத்திற்குக் காரணபூதம்? அவனை ரஞ்சிதம் எவ்வளவு தூரம் நம்பியிருந்தாள்! சந்திர சூரியர்கள் திசை மாறினும் மாறுவார்கள், ராஜமுத்துவின் காதலில் மாறுதலே இருக்காது என அவள் அவனை முழுதும் நம்பியிருந்தாளே. பாவம், பாவி, ஆசையைக் காட்டி மோசம் செய்துவிட்டானே! ரஞ்சிதத்தின் கண்களில் நீர் முத்து முத்தாகத் திரண்டு மீண்டும் கன்னங்களின்மீது வழிந்தோடியது.

தன்னை இன்னமும் நம்பி ஏமாற வேண்டுமென்று

தானே ராஜமுத்து அன்று காலை திருடனைப்போல் வந்து வெட்கமின்றி விளையாட்டாகப் பேச முயன்றான்! என்ன தைரியம் அவனுக்கு! ரஞ்சிதத்தின் துக்கம் ஆத்திரமாக மாறியது.

## 2

ரஞ்சிதம் பூவாலூர்ப் பூக்கடை வீராசாமியின் அண்ணன் மகள். சின்னஞ்சிறு வயதில் தாயையும் தந்தையையும் சேர்ந்தாற்போல் பறி கொடுத்தவள். அநாதையான அவளைச் சிறிய தகப்பன் பச்சாத்தாப மிகுதியினால் வளர்க்க ஒப்புக்கொண்டான்.

பாஞ்சாலி அவளது சிற்றப்பன் வீராசாமியின் ஒரே மகள். பல வருஷம் பிள்ளையின்றி, கடைசியில் பெற்றெடுத்த பெண்ணாகையினால் பாஞ்சாலிக்குப் பெற்றோர்களின் சலுகை அதிகம். அவள் ரஞ்சிதத்தைவிட இரண்டு வயதுதான் சிறியவள்.

பாஞ்சாலி தன் பெற்றோர்களின் சலுகையின் போக்கை உணர்ந்து சதா ரஞ்சிதத்துடன் போட்டியிடுவாள். ரஞ்சிதத்திற்குப் பிடித்த பொருள்கள் மீதெல்லாம் பாஞ்சாலிக்கும் மோகம் ஏற்படும். தனக்குக் கிடைக்காத பொருள் ரஞ்சிதத்திற்கும் கிடைக்கக்கூடாது. அதுதான் பாஞ்சாலியின் மனோரதம்.

செல்லப் பெண் பாஞ்சாலி வீட்டு வேலை ஒன்றும் செய்யமாட்டாள். காலையில் எழுந்து பூப்பறித்து, மாலை கட்டுவது முதல் சகல வேலையும் ரஞ்சிதம்தான் செய்வாள். தான் மட்டும் உழைத்து ஓடாக வேண்டும், பாஞ்சாலி சோற்றைத் தின்றுவிட்டு நன்றாகத் தூங்கவேண்டும் என்றால் மிகவும் அக்கிரமமாகத்தான் ரஞ்சிதத்திற்குத் தோன்றியன் எல்லாக் கஷ்டங்கவையும் சகித்துக்கொண்டு வாயை மூடிக்கொள்ள அவள் தயாராக இருந்தாலும் பாஞ்சாலி விடுவதில்லை. வாய் கிழிய வெற்றிலையைக்



குதப்பிக்கொண்டு, வாரி முடித்த தலையில் ஒரு சுமைப் பூக்கட்டுடன் கோவில் மாட்டைப் போன்று வம்பு தும்புகள் பாக்கியில்லாது அளந்துவிட்டு, வீட்டிற்கு வந்து காரணமின்றி ரஞ்சிதத்துடன் ஒரு மூச்சு சண்டையிட்டு ரகளை செய்வாள். அந்த ஒன்றுதான் அவளால் சகிக்க முடியாத துன்பமாக இருந்தது.

வீராசாமியின் பூக்கடை, கடைத்தெருவின் நடுவில் இருந்தது. அதினின்று வந்த வரும்படி அவனது குடும்பத்திற்குப் போதுமானதாக இருந்தது. பூந்தோட்டம், தோட்டக்காரச் சின்னசாமியைச் சேர்ந்தது. அதை வீராசாமிக்குக் குத்தகைக்கு விட்டிருந்தான். அந்தத் தோட்டத்தைக் குத்தகை எடுக்க எத்தனையோ பேர் தயாராய் இருந்தும், சின்னசாமி பழைய நாள் சிநேகிதத்தின் பொருட்டு வீராசாமியிடமேதான் அதை விட்டிருந்தான்.

மார்கழி மாத ஊதக் காற்றிலும், மூடு பனியிலும் குளிரினால் பற்கள் கிட்டிக்கொள்ள, மிகவும் கஷ்டத்துடன் அன்று ரஞ்சிதம் தோட்டத்தில் பூப்பறித்துக்கொண்டிருந்தாள்.

உள்ளே நுழைந்த வாலிபன் ஒருவன் தன் உத்தரவின்றிச் சில ரோஜாப் பூக்களைப் பறிப்பதை உணர்ந்த ரஞ்சிதம் கோபங்கொண்டு ''யாரையா இது! பகல் கொள்ளையாக இருக்குதே?'' என்று அதட்டினாள்.

''பகல் கொள்ளையுமில்லை, ராத்திரிக் கொள்ளையுமில்லை. யாருன்னுட்டு அதட்டறே?'' என்றான் அவன் கோபமாகப் பதிலுக்கு.

துணிச்சல் நிறைந்த அந்த மனிதனின் செய்கை அவளுக்கு வேடிக்கையாக இருந்தது. சற்று அருகில் சென்று அவனைக் கவனித்தாள். கதர் ஷர்ட்டு அணிந்த கிராப்புத் தலை ஆசாமி அவன். ஊருக்குப் புதிது போலிருந்தது. அதுவரை அவனை எங்கும் பார்த்ததாக அவளுக்குத் தென்படவில்லை.

'என்ன ஐயா! எங்க தோட்டத்துக்குள் பூந்து ஒரு வார்த்தை கேட்காம பூவைத் திருடி எடுக்கிறே? பார்த்தா நாணயக்கார மனுசனாட்டமா இருக்கே. பண்ணற காரியம் நல்லா இல்லியே!'' எனக் கேலியும் கோபமுமாகக் கேட்டவள், ''அந்தப் பூக்களை இப்படிக் குடலையில் போடய்யா! பிறத்தியார் சொத்துக்குப் பேயாய்ப் பறக்காதே'' என்று முடித்தாள்.

''இது உங்க தோட்டமா? அடே, தெரியாதே எனக்கு! சுவாமி படத்துக்குப் போட வேணுமிட்டுக் கொஞ்சம் பூ எடுக்க வந்தேன்!'' என்று இழுத்தான் அவன்.

''பூ வேணுமானால் காசு கொடுத்து வாங்கிப் போ. மற்றவங்க தோட்டத்தில் புகுந்து கொள்ளையடிக்கச் சொல்லுதா சுவாமி!'' என உரத்துக் கேட்டாள். பதிலுக்கு அவன் கையிலிருந்த பூக்களைக் குடலையில் வீசிவிட்டுப் போய்விட்டான். பெரிய கோட்டையொன்றைப் பிடித்த சிற்றரசன் அடைந்த வெற்றி மகிழ்ச்சியை ரஞ்சிதம் அப்பொழுது அடைந்தாள்.

அதே நாள் பகல் சந்தை சாமான்களுடன் வீடு திரும்பிய ரஞ்சிதம் காலையில் தோட்டத்தில் தன்னுடன் விவாதம் செய்த வாலிபன் தன் சித்தப்பனுடன் வாசல் திண்ணையில் உட்கார்ந்து சம்பாஷித்துக் கொண்டிருப்பதைக் கண்டு திடுக்கிட்டாள். சித்தப்பனுக்குத் தெரிந்த மனிதனை அதட்டிவிட்டோமே எனப் பயந்த அவள், அவனை ஒரு கணம் நோக்கினாள். ஆச்சரியம்! அவனும் அவளை அதே சமயம் பார்த்துக்கொண்டிருந்தான்.

உள்ளே நுழைந்த ரஞ்சிதம் ஒரு கணத்தில் தான் வேற்று மனுஷியாகிவிட்டதை உணர்ந்தாள். ஆமாம், வாயிற் திண்ணையில் உட்கார்ந்திருந்த அந்த வாலிபன் ஒரே பார்வையில் அவளது மனத்தைத் திருடிக்கொண்டு விட்டான்!

''அம்மா, அதுதானே தோட்டக்காரர் தம்பி! சின்ன



சாமிதான் செத்துப் போயிட்டாரே! இனிமேலே தோட்டம் இவரைத்தானே சேர்ந்தது?'' என்று பாஞ்சாலி தன் தாயிடம் கத்திக்கொண்டிருந்ததைக் கேட்ட ரஞ்சிதத்திற்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. சின்னசாமி திடீரென்று காலராவில் ஒரு வாரத்திற்கு முன் இறந்துவிட்டான். அவனுடைய வாரிசு அவன் தம்பிதான். அவன் வெளியூரில் இருக்கிறான், வருவான் என ஊரில் பேசிக்கொண்ட விஷயத்தை அவள் கேள்விப்பட்டிருந்தாள். காலையில் தன்னால் அதட்டப்பட்ட அந்த மனிதன் தங்கள் தோட்டத்து எஜமானன்!

''கொஞ்சம் பூ நிதெக்கும் சுவாமி படத்துக்குப் பறிச்சுக்கிட்டுப் போறேன்னு உங்கப்பாருகிட்ட அவரு கேட்டாராம். பையன் ரொம்ப தங்கமான பிள்ளை'' என்று அவள் சிறிய தாயார் புகழ்ச்சியாகக் கூறிய சொற்கள் ரஞ்சிதத்தின் தலையைச் சுற்ற வைத்தன.

## 3

அடுத்த நாள் வழக்கம்போல் ரஞ்சிதம் விடியற் காலையில் பூப்பறித்துக் கொண்டிருந்தாள். தோட்டத்து வேலியருகில் வந்து நின்றான் அவன்.

''உங்களைத்தானே அம்மா! சுவாமி படத்துக்குப் பூ வேணும். பறிச்சுக்கொள்ளலாமா?'' என்று கேட்டான் பரிகாசக் குரலில்.

''வேணுங்கறது பறிச்சுக்குங்க'' என மரியாதையுடன் பதிலளித்தாள் ரஞ்சிதம். முதல் நாள் சம்பவம் அவளைச் சற்று வெட்கமடையச் செய்தது.

''இந்தாங்க பணம் பூவுக்கு, தோட்டக்காரம்மா!'' என அவன் கூப்பிட்டுக்கொண்டு அருகில் வந்து கையை நீட்டினான்.

''தோட்டத்தின் சொந்தக்காரர் நீங்கதான்னு புரிஞ்சுக்கிட்டேன். உங்க வீட்டுப் பூவுக்குப் பணம் வாங்க யாருக்குத் தைரியம்?'' என்று மிடுக்காகப் பதிலளித்த ரஞ்சிதத்தின்

முகத்தை அவன் ஏறிட்டு நோக்கினான். கையில் இருந்த ரோஜாவின் இதழைவிட அவள் கன்னங்கள் சிவந்து போனதை அவன் கவனிக்கத் தவறவில்லை.

இப்படியாக ஆரம்பித்தது ராஜமுத்து - ரஞ்சிதத்தின் காதல் நாடகம். ஒருநாள் அவனைப் பார்க்காவிட்டால் அவளுக்கு உலகமே இருண்டு விட்டதைப் போன்று இருக்கும். அவனுடன் வார்த்தையாடும் அந்த அரைமணி நேரம் அவளுக்குச் சொர்க்கமாகத் தென்பட்டதில் ஆச்சரியமில்லை.

''ரஞ்சிதம், இந்தக் கஷ்டம் என்னத்திற்கு? தை மாசம் வரை பொறுத்துக்கோ! அண்ணார் செத்து ஒரு வருஷமாகி விடும். உன்னைக் கட்டிக்கொண்டு விடறேன். அப்பறம் நீ இந்தப் பட்டிக்காட்டில் ஏன் கஷ்டப்படணும்? பட்டணத்தாளாகி விடமாட்டே! உன்னைக் கட்டிக் கொண்டதும் என் ஊருக்கு அழைச்சிக்கிட்டுப்போயிடுவேன் தெரியுமா!'' என்று அவளுடன் தனிமையில் தோட்டத்தில் இருக்கும்பொழுது அவன் அடிக்கடி சொல்வான்.

தை பிறந்தால் தனக்கு ஒரு வழி பிறக்கும் என்று ஆசையுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் ரஞ்சிதம். ராஜமுத்து அவள் வாழ்வில் புகுந்த அன்றிலிருந்து அவளுக்கு உலகமே ஜோதிமயமாகப் புலப்பட்டது.

எதற்கு எடுத்தாலும் போட்டியிடும் பாஞ்சாலி ரஞ்சி தத்தின் காதல் விஷயத்திலும் போட்டியிட ஆரம்பித்தாள். அத்தனை நாள் இல்லாது அவளுக்கும் ரஞ்சிதத்தைப்போல் காலை வேளையில் பூப்பறிக்க வேண்டுமென்ற ஆசை தோன்றியது. அவளும் தினமும் கிளம்பி விட்டாள் தோட்டத்திற்கு.

ராஜமுத்துவின் பாடு மிகவும் கஷ்டமாகிவிட்டது. தனிமையில் ரஞ்சிதத்துடன் பேசும் சந்தர்ப்பமே அவனுக்கு இல்லாது போய்விட்டது. ஏதோ அவன் சொல்ல வாய் திறந்தாலும் பாஞ்சாலியின் துறுதுறுத்த கண்கள்



சந்தேகத்துடன் அங்குமிங்கும் நோக்கின. ரஞ்சிதத்தினால் இந்தக் கொடுமையைச் சகிக்க முடியவில்லை. எதற்கும் போட்டியிடும் அந்தப் பாவிப் பெண் காதலிலும் போட்டி விட வந்துவிட்டாளே என அவளை வெறுத்தாள்.

## 4

அன்று ஒருநாள் பாஞ்சாலி வேண்டுமென்றே ஆரம் பித்தாள் பேச்சை. ''ராஜமுத்துவுக்குக் கல்யாணமாமே! அப்பா சொன்னார்'' என்று ஒரு வெடிகுண்டைத் தூக்கிப் போட்டாள். அதைக் கேட்ட ரஞ்சிதம் உணர்விழந்து விட்டாள்.

''பொண்ணு அவரு் மாமா பொண்ணாம். ரொம்ப நாளா பேசியிருந்த விசயமாம். கல்யாணம் தை மாசம் இங்கேதான் நடக்குமாம். நம்ப ஊர்த் திருவிழாவுக்கு அவரு மாமாவும் அந்தப் பொண்ணும் வராங்களாம்!'' என்று கூறிவிட்டு வாசல் பக்கம் நடையைக் கட்டினாள்.

அவ்வளவுதான்! ரஞ்சிதத்தின் மனம் சுக்கல்தூளாக வெடித்துவிடும்போல் தோன்றியது. ராஜமுத்து இவ்வளவு தூரம் துரோகம் செய்வான் என்று அவள் எதிர் பார்த்தாளா? துக்கம் தாங்காத அவள் தனிமையில் விம்மி விம்மித் தன் மனம் ஆறும்வரை அழுது தீர்த்தாள்.

பாஞ்சாலி கூறியதுபோல் ராஜமுத்து ஊரிலிருந்து திடீரென மறைந்து விட்டான். நாலைந்து நாட்களாக யார் கண்களிலும் தென்படவில்லை. பாஞ்சாலிக்கு ஊர் வம்பு சகலமும் தெரியும். அவள் சொன்னதில் நிஜம் இருக்கும் என்பதை ராஜமுத்துவின் நடத்தையின் போக்கு ரஞ்சிதத்திற்கு வெட்ட வெளிச்சமாக்கி விட்டது.

ரஞ்சிதம் மனம் வெந்து வெதும்பிப் போயிருந்த அந்த நிலையில்தான், திரும்பி வந்த ராஜமுத்து ஒன்றுமே விஷயம் புரியாதவன்போல் அவளிடம் நடிக்க முயன்றான் போலிருக்கிறது! ''கதம்பம் வேண்டும் என்றானே? யாருக்

காக இருக்கும்? தனக்கு வரப்போகும் மனைவிக்கா? என்ன
தைரியம் அவனுக்கு! கண்முன் துரோகம் செய்து
கொண்டே என்னை ஏய்க்கப் பார்க்கிறானே?'' அவள்
உள்ளத்தில் ஆத்திரப் புயல் வீசியது. ''வரட்டும் ராஜ
முத்து!'' எனக் கறுவினாள் மனத்திற்குள்.

மறுநாள் விடிந்ததும் வழக்கம்போல் அவள் பூப்
பறிக்கச் சென்றாள்.

''இதுதான் நம்ப தோட்டம். நீ வேணுங்கற பூ
ஆசை தீரப் பறிச்சுக்கொள்!'' என்று கூறிய வண்ணம்
ராஜமுத்து அந்நியப் பெண் ஒருத்தியுடன் தோட்டத்
திற்குள் நுழைந்தான். பூப் பறித்துக்கொண்டு நின்ற
ரஞ்சிதத்தைப் பார்த்து, ''ரஞ்சிதம், இவளுக்குக் கொஞ்சம்
பூப் பறித்துக் கொடேன்'' என்றான்.

அவ்வளவுதான், ரஞ்சிதத்திற்கு ஆத்திரம் தாங்க
முடியவில்லை. ''எனக்கு வேலை கிடக்குது. வேணுமானால்
அந்தம்மாவே பறிச்சுக்கட்டும்'' என வெடுக்கென்று கூறி
விட்டுத் தோட்டத்தை விட்டு வேகமாக வெளியேறி
விட்டாள். அவள் கண்கள் கண்ணீர் வெள்ளத்தில்
மூழ்கியதை ராஜமுத்து கவனிக்கவில்லை.

மேலும் இரண்டு நாட்கள் சென்றன. ராஜமுத்து
வைத் தோட்டப் பக்கமே காணவில்லை. ஆமாம்! ரஞ்சிதத்
திற்கு விஷயம் விளங்கி விட்டதென்றுதான் அவன்
தலைமறைவாக இருந்தான் போலும்!

## 5

மூன்றாவது நாள் காலையில் தோட்டத்தில் அவள்
பின்னால் வந்து சந்தடி செய்யாது நின்ற ராஜமுத்து,
''அப்பாடா! திருவிழா முடிஞ்சுது. எனக்கும் நிம்மதியாச்
சுது'' என்றான் மெதுவாக. திரும்பிப் பார்த்த அவளுடைய
கண்களில் அனல் வீசியது.

ஒன்றுமறியாத ராஜமுத்து, ''இதென்ன ரஞ்சிதம்,
ரொம்ப மாறிவிட்டே, நீ! அன்னிக்குக் கொஞ்சம் கதம்பம்



வீட்டுக்கு அனுப்பச் சொன்னேன், அனுப்பி வைக்கலை.
முந்தாநேத்துப் பறிச்சுத் தரச்சொன்னேன், சள்ளுன்னு
விழுந்தே. இது என்ன உனக்கு?'' என்று பாதி கொஞ்சலும்
பாதி அதட்டலுமாகக் கேட்டான்.

ரஞ்சிதத்தின் கண்களில் நீர் நிரம்பிவிட்டது. ''வரப்
போகிற பெண்டாட்டிக்குப் பூப்பறிச்சு நான்தான் தரண
மாக்கும்'' என்று சீறினாள் அவள் பதிலுக்கு.

ராஜமுத்து பதிலுக்குச் சிரித்தான் வாய் விட்டு.
''அப்படிச் சொல்லு! விசயம் இப்போதுதான் விளங்குது!
யார் சொன்னா அந்தப் பொண்ணை நான் கட்டிக்கப்
போறேன்னுட்டு?'' என்று சிரித்தான்.

''ஏன்? பாஞ்சாலிதான் சொன்னா! அவ உங்க மாமா
மகள். என்னை இன்னம் ஏமாத்த வேண்டாம்'' என
விம்மினாள் ரஞ்சிதம் துக்கம் தாங்காமல்.

''விளங்கிச்சு இப்போ! இது பாஞ்சாலி வேலையா?
உன்னைக் கட்டிக்கப் போறேன்னு ஊரிலே போய் நான்
என் பெரியப்பா கிட்டச் சொன்னேன். நேத்து வந்தவள்
என் பெரியப்பா மகள். திருவிழா பார்க்கவந்த அவள்
அப்படியே நான் கட்டிக்கப்போற பெண்ணையும் பார்க்கணு
மின்னு ஆசைப்பட்டாள். நான் சொன்னேன், தோட்டப்
பக்கம் ஜாடையா வந்தா காட்றேன்னுட்டு. அவ உன்னைப்
பத்தி என்ன சொன்னா தெரியுமா?'' என்று கேட்டான்
சிரித்துக்கொண்டு.

வியப்பு அடைந்த ரஞ்சிதம், ''என்ன சொன்னாங்க?''
என்று வெட்கத்துடன் கண்ணீரைத் துடைத்துக் கொண்
டாள்.

''பொண்ணு நல்லா இருக்கா; ஆனால் வாய்தான்
கொஞ்சம் அதிகமாக இருக்கிறது. இப்படி என் மானத்தை
வாங்கிட்டியே! உன்னை என்ன செய்தால் தேவலை?''
என அன்புமிக்கவனாகப் பல்லைக் கடித்தான்.

ரஞ்சிதத்தின் உதடுகளில் ஒரு மோகனப் புன்னகை

தவழ்ந்தது. ''என்ன வேணுமானாலும் செய்துக்கோ
எனக் கொஞ்சினாள்.

அருகில் நெருங்கிய அவன் அவள் கையிலி
பூக்குடலையை இழுத்து அதை அவள் தலைமீது க
தான். குடலையில் இருந்த பூக்கள் எல்லாம் அ
தலைமீது உதிர்ந்து ஓடின.

சஞ்சலம் தீர்ந்த ரஞ்சிதம் பதிலுக்கு ஒரு புன்
செய்தாள்.

## சித்தி

டாக்டர் ஜானகி தனது இருபத்தெட்டாவது வய
விசுவா இன்ஷூரன்ஸ் கம்பெனி மானேஜிங் டைரக்
ஸ்ரீதரனுக்கு இரண்டாவது மனைவியாக வாழ்க்
பட்ட பொழுது, சிற்றன்னை என்ற தன்னுடைய ஸ்தா
மிகவும் பயங்கரமாக இருக்கப் போகிறதென்று ஒரு க
கூட நினைக்கவில்லை.

முதல் மனைவி இறந்து பத்து வருஷங்கள் வ
தமது ஒரே பெண் சரோஜாவின் நிமித்தம் மறும
செய்துகொள்ளாது தனிமையில் காலம் தள்ளிய ஸ்ரீதர
தமது முப்பத்தெட்டாவது வயதில் திடீரென்று விவா
செய்துகொள்ள உத்தேசித்ததைக் கேட்ட அவர
முதல் மனைவியின் பெற்றோர்கள் சிறிது அதிருப்தி
அடைந்தனர். ஸ்ரீதரனுக்கு ஏற்பட்ட சிந்தனைமாற்ற
தின் காரணம், அவருக்கு ஜானகியின் அழகிய தோற்றத்தி
ஏற்பட்ட மதிமயக்கமா? அல்லது, ஜானகிக்கு ஏற்பட்
குரு தசையின் மகிமையா? யாருக்கும் தெரியாது. ஆயினு
பத்து வருஷங்களுக்குப் பின் ஸ்ரீதரன் இரண்டாவது
விவாகம் செய்து கொண்டார்.

கணவனது இச்சைப்படியே வைத்தியத் தொழிலை
கைவிட்டுக் குடும்பப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு புக்க
வந்த ஜானகிக்கு, தனது வாழ்க்கை சிற்றன்னை என்